## கழகத்தைச் சார்ந்து நீங்கள் இல்லை, கழகம்தான் உங்களைச் சார்ந்து இருக்கிறது:

# கழகத்தின் வெற்றிக்கு 25 சார்பு அணிகளின் உழைப்பு முக்கியம் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும்!

## திருநெல்வேலி மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சந்திப்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

நெல்லை,மார்ச்.7-

**திருநெல்வேலி, மாதா மாளிகையில் திருநெல்வேலி கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மூன்று கழக மாவட்டங்களைச் சேர்ந்த கழகத்தின் சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக்கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிகு உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``அரசின் சாதனைகள் இருக்கின்றன, கொள்கைகள் இருக்கின்றன, வீடு வீடாகச் சென்று அவற்றைப் பேசுங்கள். திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். புதிய வாக்காளர்களிடம் கழகத்தைப் பற்றியும் நம் அரசின் திட்டங்களைப் பற்றியும் பேசுங்கள். கழகத்தின் வெற்றிக்குச் சார்பு அணிகளின் உழைப்பு ஒரு முக்கிய காரணமாக இருந்தது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அணியிடமும் இருக்கிறது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

இன்று திருநெல்வேலி கிழக்கு, மத்திய, மேற்கு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த கழகத்தின் சார்பு அணிகளைச் சேர்ந்தவர்களையெல்லாம் சந்தித்துப் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்று காலையில் சென்னையிலிருந்து புறப்பட்டுத் தஞ்சாவூர் சென்று, அங்கிருந்து சாலை வழியாக மதுரையில் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, அதன் பிறகு இங்கு வருகை தந்து அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, கடைசியாக உங்களையெல்லாம் சந்திப்பதற்காக வருகை தந்திருக்கிறேன்.

### நெல்லை கழகத்தின் கோட்டை

இவ்வளவு தூரம் சாலை மார்க்கமாக பயணம் செய்ததனால், இயல்பாகவே ஒரு சோர்வு நிச்சயமாக இருந்தது. ஆனால், உங்களையெல்லாம் சந்தித்த பிறகு அந்தச் சோர்வெல்லாம் நீங்கிச் சற்றுப் புத்துணர்ச்சியுடன் இருக்கிறேன். இந்த நெல்லை மாவட்டம், எப்போதுமே கழகத்தின் கோட்டை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்ற அளவுக்கு உங்களின் அன்பும், ஆதரவும், எழுச்சியும், உற்சாகமும் எப்போதுமே இருக்கும். அதனால் நெல்லைக்கும் நம் கழகத்துக்கும் கலைஞருக்கும் எப்போதுமே நெருங்கிய சம்பந்தம் உண்டு, நெருங்கிய தொடர்பும் உறவும் உண்டு.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தலைவர் கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டு, இங்குள்ள பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போது கலைஞரைப் பார்ப்பதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கு வந்து, கலைஞரைப் பார்த்துவிட்டு வெளியே வந்து சொன்னார். ``நான் செல்ல வேண்டிய புண்ணிய பூமி. இதோ என் தம்பி கருணாநிதி அவர்கள் அடைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சிறை" என்று அண்ணா அவர்கள் பெருமையாகச் சொல்வார். அப்படிப்பட்ட பெருமையைக் கொண்ட நெல்லை மாவட்டத்துக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமையடைகிறேன்.

### சிறப்பான சந்திப்பு

இன்னும் சொல்லப்போனால், மூன்றே நாட்களில்தான் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்பாக இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளீர்கள். அதற்கு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை, வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கழகத்தின் அணிகள், கிட்டத்தட்ட 25 சார்பு அணிகளின் நிர்வாகிகளான உங்களையெல்லாம் சந்திக்கிறேன். இந்த அணிகளையெல்லாம் ஆங்கிலத்தில் விங்க்ஸ் (Wings) என்று சொல்வார்கள். இன்று கழகம் வெற்றி மேல் வெற்றிபெற்று உயர உயரப் பறக்கிறது என்றால், அதற்குச் சிறகாக இருப்பது, வருகை தந்திருக்கக்கூடிய அணிகளின் நிர்வாகிகளாகிய நீங்கள்தான்.

### சார்பு அணிகளின் முக்கிய பணி

நம் கழகத்தில் மட்டும்தான் மாற்றுத்திறனாளிகள் அணி, கல்வியாளர் அணி என்று மொத்தம் 25 அணிகள் இன்று இருக்கின்றன. எதற்காக இத்தனை அணிகளை நம் தலைவர் அவர்கள் அமைத்துக் கொடுத்திருக்கின்றார்? நம் பணிகளையெல்லாம் ஒருங்கிணைப்பதற்கு, நாம் கழகப் பணியையும் மக்கள் பணியையும் செய்வதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்குத்தான், இத்தனை அணிகள். அதுமட்டுமல்ல, எல்லாப் பிரிவு மக்களுடனும் நாம் தொடர்ந்து தொடர்பில் இருக்கவேண்டும் என்பதுதான், இந்த அணிகளின் முக்கிய காரணம் மற்றும் நோக்கம். எல்லோருடைய தேவையையும் நாம் உள்வாங்கி அதை நிறைவேற்றுவதற்காக நம் உழைப்பை நாம் கொடுக்க வேண்டும். இதுதான் சார்பு அணிகளின் மிக மிக முக்கியமான ஒரு பணி. சார்பு அணிகள் என்று சொல்வதனால், நாம் கழகத்தின் மீது சார்ந்து இருக்கிறோம் என்று அர்த்தம் கிடையாது. கழகம்தான் நம்மைச் சார்ந்து இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து, அதை நிரூபித்துக் காட்ட வேண்டும். நாம் சார்பு அணிதானே என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. சார்பு அணிகள் என்பது கழகத்தில் பணிபுரிவதற்கான ஒரு பயிற்சிக்களம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். நீங்கள் அனைவரும் சரியாக உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரத்தை, நம் தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் நிச்சயம் கொடுப்பார் என்கின்ற வாக்குறுதியை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

அதற்கு நிறைய உதாரணங்களை நான் இங்கு சொல்ல முடியும். இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, சட்டத்துறை, தகவல் தொழில்நுட்ப அணி இப்படிப் பல்வேறு அணிகளில் பணியாற்றிய பலர் இன்று அமைச்சர்களாக, மாவட்டச் செயலாளர்களாக, பொறுப்பாளர்களாக, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களாக, மேயர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக இன்று மக்கள் பணி செய்துகொண்டு இருக்கிறார்கள். எனவே நீங்கள் கழகத்துக்குச் சரியாக உழைத்தீர்கள் என்றால், கழகம் நிச்sswயம் உங்களுக்கான உயர்வை நம் தலைவர் மூலம் பெற்றுத் தரும்.

### ஏராளமான திட்டங்கள்

இன்று நம் முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களை இந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்குக் கொடுத்திருக்கிறார். அதில் குறிப்பிட்டுச் சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். பள்ளி குழந்தைகளுக்கு, முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். மகளிருக்கு விடியல் பயணத் திட்டம். கல்லூரி மாணவிகளுக்குப் புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்குத் தமிழ்ப் புதல்வன் திட்டம். இப்போது சமீபத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குகின்ற திட்டம். இவை அனைத்தையும் விட, மிகப்பெரிய ஒரு திட்டம், தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன திட்டம், அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்.

கடந்த மூன்று வருடங்களாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் அவர்கள் உரிமைத் தொகையாக வழங்கியிருக்கிறார். இதை எப்படியாவது சட்டமன்றத் தேர்தலைக் காரணம் காட்டி நிறுத்திவிட வேண்டும் என்று சங்கிகளின் கூட்டம் முயற்சி செய்தனர். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? மூன்று மாதங்களுக்குச் சேர்த்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதத் தொகையோடு கூடுதலாகக் கோடை சிறப்பு நிதி என்று சொல்லி, இன்று ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் வழங்கியிருக்கிறார்.

### வங்கிக் கணக்கில் ரூ.5,000

தலைவர் யாருக்கும் தெரியாமல், சொல்லாமலேயே காலை 7 மணிக்கு அந்த மகளிரின் வங்கிக் கணக்கில் 5,000 ரூபாய் வரவு வைத்துவிட்டார். 9 மணிக்கெல்லாம் மகளிர் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டார்கள். அந்த அளவுக்கு நம் மகளிர் இந்த ஒன்றிய அரசு மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். முதலமைச்சர் 5,000 ரூபாய் பணம் போட்டிருக்கிறார், ஒன்றிய அரசு ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி அதை எடுத்துவிடுவார்கள், பிடுங்கிவிடுவார்கள் என்று ஒன்றிய அரசு மீது அவ்வளவு நம்பிக்கை. இதுதான் ஒன்றிய அரசுக்கும் நம் திராவிட மாடல் அரசுக்குமான வித்தியாசம்.

இதுமட்டுமல்ல, நேற்று முன்தினம் விளிம்புநிலை மக்கள் 38 லட்சம் பேருக்கு 2,000 ரூபாய் சிறப்பு நிதியையும் நம் முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இதனால்தான் இன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒட்டுமொத்த மக்களும் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். இன்று நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயன்பெறாத வீடுகளே இல்லை. ஒவ்வொரு வீட்டிலும் யாராவது ஒருவர் ஏதாவது ஒரு திட்டத்தில் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லும் அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பயனாளி இருக்கிறார்கள். நம் அரசின் திட்டங்கள் மக்களை சென்றடைந்திருக்கின்றன. அந்தத் தைரியத்தில்தான் இன்று முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு நாளும் மக்களைச் சந்திக்கிறார்கள். இந்தத் தேர்தலையும் நாம் எதிர்கொள்ள இருக்கின்றோம். உங்களையும் மக்களைச் சந்திக்குமாறு வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்.

### திருநெல்வேலி திட்டங்கள்

இந்த நெல்லை மாவட்டத்தில் ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம்.

திருநெல்வேலியில் 85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டிருக்கிறது. 606 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ராதாபுரம், வள்ளியூர், களக்காடு, நான்குனேரி, பாளையங்கோட்டை, சேரன்மாதேவி ஒன்றியங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப் பட்டிருக்கிறது.

424 கோடி ரூபாய் மதிப்பீட்டில் களக்காடு நகராட்சி மற்றும் ஏழு பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 180 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்குப் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கண்ணியமிகு காயிதே மில்லத் பெயரில் ஒரு நூலகம் அமைக்கப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நெல்லை அரசு மருத்துவக் கல்லூரியில் 72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படி ஏராளமான திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இது போன்ற திட்டங்களால்தான் இன்று இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' மாநிலமாக, வளர்ச்சி அடைகின்ற மாநிலங்களில் முதல் மாநிலமாக 11.19 சதவிகித வளர்ச்சியோடு இன்று நம் தமிழ்நாடு முதலிடத்தை அடைந்திருக்கிறது.

### ஒன்றிய அரசு தொந்தரவு

தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சியைப் பார்த்துப் பிடிக்காமல்தான் ஒன்றிய அரசு பல்வேறு வகைகளில் நமக்குத் தொந்தரவுகளைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மொழி உரிமையைப் பறிக்கிறார்கள். நிதி உரிமையைப் பறிக்கிறார்கள். மாநில உரிமை ஒவ்வொன்றையும் எப்படியாவது முடக்கப் பார்க்கிறார்கள். ஒட்டுமொத்த உரிமைகளையும் பறிக்கின்ற வேலைகளைப் பாசிசக் கும்பல்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இதையெல்லாம் எதிர்த்துத்தான் நம் முதலமைச்சர் அவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன செய்கிறார்?

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய நிதி எதுவும் வரவில்லை. ஒன்றிய அரசு சமீபத்தில் பட்ஜெட் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையை ஒன்றிய நிதித்துறை அமைச்சர் முழுமையாகப் படித்து முடிக்கக்கூட இல்லை. ஆனால், அதற்குள் இங்கு இருக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்நாட்டிலிருந்து ஒரு பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார். அந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கென்று எந்தத் திட்டமும் ஒதுக்கப்படவில்லை. தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய கல்வி நிதி வரவில்லை.

### குலக்கல்வித் திட்டம் திணிப்பு

புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வர வேண்டும் என்று ஒன்றிய அரசு சொல்கிறது. பிற மாநிலங்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கலாம், ஆனால், தமிழ்நாடு அதை ஏற்கவில்லை. ஏனெனில், ஒன்றிய அரசு குறுக்கு வழியில் சமஸ்கிருதத்தையும் இந்தியையும் திணிக்கப் பார்க்கிறது. மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கப் பார்க்கிறது என்று நம் முதலமைச்சர் அவர்கள் மறுத்துவிட்டார். இன்று ஒன்றிய அரசு நம் மாநிலத்துக்குத் தர வேண்டிய கல்வி நிதி 3,200 கோடியை நிறுத்தி வைத்திருக்கிறது.

ஒன்றிய அமைச்சர் சொல்கிறார், 'மற்ற மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டன, தமிழ்நாடு மட்டும் ஏற்க மறுக்கிறது. தமிழ்நாடு ஏற்றுக்கொண்டால்தான் 3,200 கோடி கொடுப்போம்' என்று. நம் தலைவர் சொல்லிவிட்டார். 'நீங்கள் மீண்டும் புதிய கல்விக் கொள்கை மூலமாக இந்தியையும் சமஸ்கிருதத்தையும் திணிக்கப் பார்க்கிறீர்கள். குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்கப் பார்க்கிறீர்கள். 3,200 கோடி அல்ல, நீ 10,000 கோடி கொடுத்தாலும் எந்த நேரத்திலும் தமிழ்நாட்டுக்குள் இந்தித் திணிப்பை நான் நிச்சயமாக அனுமதிக்க மாட்டேன்' என்று சொன்ன ஒரே தலைவர் நம் தலைவர். இன்று மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் ஒன்றிய அரசு ஏதாவது திட்டம் கொண்டு வந்தால், தமிழ்நாடு என்ன முடிவெடுக்கிறது என்று பொறுத்திருந்து பார்க்கிறார்கள். அதன்பிறகுதான் அவர்கள் அந்த முடிவை எடுக்கிறார்கள்.

### பயப்பட மாட்டோம்

நான்கு நாட்களுக்கு முன்னால் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் மதுரைக்கு வந்திருந்தார். நான் சமீபத்தில் பேசியிருந்தேன். 'நாங்கள் ஈடிக்கும் பயப்பட மாட்டோம், ஒன்றிய அரசு மிரட்டப் பார்க்கிறது, ஈ.டி.க்கும் பயப்பட மாட்டோம் மோடிக்கும் பயப்பட மாட்டோம். மோடி அல்ல, மோடியின் டாடி வந்தாலும் பயப்படுகிற கூட்டம் தி.மு.க கூட்டம் கிடையாது' என்று சமீபத்தில் இளைஞர் அணியின் நிர்வாகிகள் சந்திப்பில் பேசினேன். அதற்கு மோடி அவர்கள் வந்து பேசுகிறார், பெயரைக் குறிப்பிடாமல் `ஒரு சிலர் இப்படிப் பேசியிருக்கிறார்கள், என்னைப் பார்த்து யாரும் பயப்படத் தேவையில்லை' என்று குறிப்பிட்டார்.

உடனே நான் சொன்னேன். `அதை ஏன் எங்களிடம் சொல்கிறீர்கள்? கொஞ்சம் திரும்பி, உங்கள் மேடையில் அமர்ந்திருக்கிறார்களே வரிசையாக உங்களின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், அவர்களிடம் சொல்லுங்கள். ஏனெனில், அவர்களைத்தான் நீங்கள் ஈ.டி. வழக்கு, சம்பந்தி டெண்டர் எடுத்த வழக்கு, மருத்துவக் கல்லூரி அனுமதி எடுத்த வழக்கு, ஃபெரா வழக்கு என்று தொடர்ந்து மிரட்டி அவர்களைப் பயமுறுத்தி கூட்டணி சேர்த்து வைத்திருக்கிறீர்கள். ஆகவே அவர்களைப் பார்த்துப் பயப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள் திரு மோடி அவர்களே' என்று நான் சொன்னேன்.

கழக உடன்பிறப்புகளுக்குப் பயம் என்றால், என்னவென்றே தெரியாது. உங்களின் உருட்டல் மிரட்டலுக்கெல்லாம் பயப்படுகிற கூட்டம் தி.மு.க. கூட்டம் கிடையாது. ஏனெனில், கலைஞரின் உடன்பிறப்புகள் நாங்கள். கலைஞரின் வளர்ப்பு நாங்கள். கழகத் தலைவர் அவர்களால் வழிநடத்தப்படுகின்ற கொள்கை வீரர்கள் தி.மு.க உடன்பிறப்புகள்.

அந்த மதுரைப் பொதுக்கூட்டத்தில் இன்னும் பல கேலிக்கூத்துகள் நடந்தன, பார்த்திருப்பீர்கள். கூட்டத்தின் முகப்பில், தந்தை பெரியாரின் புகைப்படத்தை முதலில் வைத்தார்கள். மோடி வருகிறார் என்று தெரிந்த உடனே, அவரின் கோபத்துக்கு ஆளாகக்கூடாது என்று பெரியார் படத்தை நீக்கிவிட்டு அங்கே பா.ஜ.க.வின் சின்னத்தை வைத்துவிட்டார்கள். எடப்பாடி பழனிசாமி அவர்கள் இன்னும் கொஞ்ச நாளில் மோடி அவர்கள் சொன்னாரென்றால், அ.தி.மு.க என்ற பெயரில் இருக்கக்கூடிய `அண்ணா' என்கிற பெயரை எடுத்துவிட்டு 'அமித்ஷா தி.மு.க' என்று வைத்தாலும் வைப்பார்.

பலமுறை நான் சொல்லியிருக்கிறேன் 'ஜாடிக்கேற்ற மூடி' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதுபோல இன்று மோடிக்கேற்ற ஓர் அடிமையாக, ஒரு முரட்டு அடிமையாக இருப்பவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான். இவர்களுக்கெல்லாம் ஒரு சரியான பதிலைக் கொடுக்க வேண்டும் என்றால், நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்பு வருகின்ற சட்டமன்றத் தேர்தல்.

### கழகத்தின் சாதனைகள்

வருகை தந்துள்ள அணி நிர்வாகிகள், உங்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அடுத்து இன்னும் 40 நாட்கள்தான் தேர்தல். இன்னும் ஒரு வாரத்தில் தேர்தல் தேதியை அறிவித்துவிடுவார்கள். அடுத்து வருகின்ற 40 நாட்கள் நாம் அனைவரும் களத்தில் இருந்து நம் ஆட்சியின் திட்டங்களை, நம் கழகத்தின் சாதனைகளை, வரலாற்றை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். உங்களுக்குள் அந்தப் பொறுப்புகளைப் பிரித்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு அணிக்கும் ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொள்ளுங்கள். அனைவரும் களத்தில் இறங்கி அடுத்த 40 நாட்கள் நம் பிரச்சாரத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தேர்தல் வந்துவிட்டால், ஒரு தேநீர் மட்டும் அருந்திவிட்டுத் தீயைப் போல வேலை செய்பவன்தான் தி.மு.க தொண்டன் என்பதை நாம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளுக்கும் நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் வருகின்ற சட்டமன்றத் தேர்தல். இந்தத் தேர்தல் தமிழ்நாடு அணிக்கும், டெல்லி அணிக்கும் நடக்கக்கூடிய ஒரு தேர்தல். இந்தத் தேர்தலில் நாம் வென்று காட்ட வேண்டும். தமிழ்நாடு என்றைக்குமே டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை மீண்டும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். பாசிஸ்டுகளுக்கு மீண்டும் அதைப் புரிய வைக்க வேண்டும்.

### நிரூபிக்க வேண்டிய பொறுப்பு

அரசின் சாதனைகள் இருக்கின்றன, கொள்கைகள் இருக்கின்றன, வீடு வீடாகச் சென்று அதைப் பேசுங்கள். திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். புதிய வாக்காளர்களிடம் கழகத்தைப் பற்றியும் நம் அரசின் திட்டங்களைப் பற்றியும் பேசுங்கள். கழகத்தின் வெற்றிக்குச் சார்பு அணிகளின் உழைப்பு ஒரு முக்கிய காரணமாக இருந்தது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு அணியிடமும் இருக்கிறது.

'வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு' என்று தலைவர் சொல்லியிருக்கிறார். நமக்குத் தலைவர் கொடுத்திருக்கின்ற இலக்கு 200 தொகுதிகள். நாம் நிச்சயம் களத்தில் இறங்கி, அடுத்த 40 நாட்கள் நம் பிரச்சாரத்தைச் செய்தோம் என்றால், மக்களை நேரடியாகச் சந்தித்தோம் என்றால் 200 அல்ல, அதற்கும் அதிகமான தொகுதிகளில் நிச்சயம் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று மீண்டும் நம் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்பார் என்பதைக் கூறிக்கொண்டு, வருகின்ற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் அயராது உழைப்போம். இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், அனைத்து அணிகளின் நிர்வாகிகளுக்கும் மீண்டும் என் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் வஹாப், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆவுடையப்பன், கிரகாம்பெல், முன்னாள் அமைச்சர்கள் மைதீன்கான், பூங்கோதை ஆலடி அருணா, மாநகர மேயர் ராமகிருஷ்ணன், மாநகரப் பொறுப்பாளர்கள் சுப்ரமணியன், தினேஷ், துணை மேயர் கே.ஆர்.ராஜு, இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, ஜி.பி.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லட்சுமணன், மாலை ராஜா, மனோஜ்பாண்டியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள் பெருமாள், ராஜா முகமது, ராஜவர்மன், விஜிலா சத்யானந்த், ஆவின் ஆறுமுகம், கணேஷ்குமார், பிரபாகரன், பேச்சிப் பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணிதுரை, ஜான் ரவீந்தர், மாநகர அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

